www.tamilarangam.net

# வதைகளின் கதைகள்

ஈழ தேச விடுதலைப்போராட்டத்தை காட்டிக்கொடுத்து எதிரியின் பக்கத்தில் சார்ந்து நிற்கும் ENDLF, TELO, EROS, EPRLF, PLOT, போன்ற உதிரிக்குழுக்களின் மத்தியில் அரசுக்கு எதிராக போராடுவது போன்ற ஒரு மாயையை ஏற்படுத்தும் LTTE என்ற ஆயுதக்குழுவின் நடவடிக்கைகள் இன்று தமிழ் ஈழத்திலும் மொத்த இலங்கையினதும் தலைவிதியை நிர்ணயிப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றது. ஆயிரக்கணக்கான மக்களையும், போராளிகளையும் பலி கொண்ட இந்தப்போராட்டமானது இன்று தனது திசையை இழந்து போய் நிற்கின்றது! விடுதலைக்கு பதிலாக எலும்பையையும், சதையையும் மட்டுமே விளைவாக்கி கொண்டுள்ளது! எமது தேசத்தின் அழகிய தெருக்களில் குருதிச்சுவடுகளை மட்டுமே காணமுடிகின்றது! மனிதர்களுக்குப்பதில் துப்பாக்கிகளும், வெடிகுண்டுகளுமே! அங்கே இழப்பதற்கு எதுவுமில்லை! உயிர்களைத்தவிர!

பெறுமதி மிக்க உயிர்களும், ஆற்றல் மிக்க கருத்துக்களும் முளைத்தவுடனேயே கிள்ளி எறியப் படுகின்றன. சிந்தித்தவர்கள் என்ற ஒரே காரணத்தினால் புதைக்கப்பட்டவர்கள் ; விடுதலை உணர்வுடன் மாற்று இயக்கத்தில் இணைந்திருந்தவர்கள் என்ற ஒரே காரணத்தினால் கொல்லப் பட்டவர்கள்..... என்று ஆயிரக்கணக்கில் எமக்குள்ளேயே பலியெடுக்கப்படுகின்றார்கள். இரவோடு இரவாக தீமூட்டிக்கொழுத்தப்படுகின்றார்கள். கைது செய்து இழுத்துச்செல்லப்பட்டு மிருகத்தனமாக சித்திரவை செய்யப்படுகின்றார்கள். LTTE என்ற இயக்கத்தின் ஆதரவாளர்களையும், உறுப்பினர்களையும் தவிர மற்றவர்கள் மனித ஜீவன்களாகவே மதிக்கப்படுவதில்லை. LTTE என்ற இயக்கத்தில் ஒரு தனிமனிதனின் அல்லது சில மனிதர்களின் திடீர் முடிவுகள் மட்டுமே எத்தனை உயிர்களைப்பலி கொண்டு விட்டன !

தாய், தந்தை, மனைவி, பிள்ளைகள் என்று அனைத்தையும் துறந்து விடுதலைக்காக உயிர் கொடுக்கத்துணிகின்ற ஒருவனுடைய இழப்பு எல்லாவற்றிலும் மேலானது ! ஆனால் அந்த இழப்பு ஒரு சில தனிநபர்களின் சர்வாதிகாரத்திற்கும், மேலும் ஆயிரக்கணக்கானவர்களை கொன்று குவிப்பதற்கும் மட்டுமே பயன் படுமேயானால் அந்த இழப்பு தேவையற்றது! அது அநீதியானது ! விமர்சனமே போராட்டத்தை செலுமைப்படுத்தும். ஆனால் விமர்சிக்கப்பட்டவர்கள் எல்லாம் சுடுகாட்டில் சாம்பலாக்கப்பட்டால், நிலக்கீழ் சிறைகளில் சித்திரவதை செய்யப்பட்டால் எமது போராட்டம் திசை தெரியாத இருளினுள் இருந்து விடுபடவே முடியாதது. கருத்துச்சுதந்திரத்திற்காகவே எதிரிக்கு எதிராகப்போராடத்தொடங்கினோம். ஆனால் இன்று அதே சுதந்திரம் எம்மவர்களால் நசுக்கப்படுகின்றது. பேசவும்,எழுதவும், வாழவும் சுதந்திரம் கேட்டு துப்பாக்கிகள் எழுந்தன ! ஆனால் அதே சுதந்திரம் இன்று முன்னைவிட மோசமாக நசுக்கப்படுகின்றது என்றால் சுதந்திர ஈழம் என்பதன் உண்மையான அர்த்தம் தான் என்ன ? எதற்காக ஈழம் ? இதுவரை இழந்தது எல்லாம் எதற்காக ? எமது இனத்தின் மிருகத்தனத்தையும், காட்டுமிராண்டித்தனத்தையும் சர்வதேசங்களுக்கும் அம்பலப்படுத்தவா ?

உண்மையாகவே விடுதலைக்கு என்று புறப்பட்ட ஆயிரக்கணக்கான போராளிகளின் உணர்வுகள் பெறுமதி மிக்கவை ! உயிர்கள் மேலானவை ! இவைகள் எல்லாம் ஒரு சில தலைவர்களின் தனிப்பட்ட புகழுக்கும், அதிகாரத்திற்காகவும் மட்டும் தானா ? யாழ்மாவட்ட வழிகாமையாளரிலிருந்து யாழ் போதனா வைத்திய சாலையின் சவக்காலையின் பாதுகாவலர்கள் வரையாக 5000 பேர் வரை சிறைச்சாலையில், மிருகத்தனமாக சித்திரவதை செய்யப்படுகின்றார்கள்

எமது தேசத்து மக்களின் வரிப்பணத்தில் இலவசக்கல்வி கற்றவர்கள், அந்த மக்களின் உழைப்பில் பங்கு கொண்டவர்கள் என்ற வகையில் இந்த இன அழிப்புக்கு எதிராக நாம் என்ன செய்யப்போகின்றோம் ?

போராட்டம் அரசுக்கு எதிரானது மட்டுமல்ல !
ஆராயகத்திற்கும் எதிரானதே !
நாம் சந்திக்கின்ற ஒவ்வொரு LTTE ஆதரவாளர்களையும் இந்தக்கேள்வியை கேட்போம் !
இந்தக்கோசங்களை முன் வைப்போம் !

**இலங்கை அரசே !!!**
**அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய் !**
**தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரி !**

**விடுதலைப்புலிகளே !!!**
**அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய் !**
**மக்களுக்கு கருத்து, எழுத்து, பேச்சு சுதந்திரங்களை வழங்கு !**

*வெளியீடு – தமிழ் அகதிகள் இலக்கிய வட்டம் (சமர்)*